# அலகு – 2

# TT0302 மொழிப்பாடத்தில் படைப்பாற்றல் திறன்

## இந்த அலகு என்ன சொல்கிறது?

மொழிவழிப் படைப்பாற்றலை வளர்க்க மாணவர்களுக்கு வழங்கப்படும் கற்றல் நிலைகளைக் குறித்தும், மாணவர்கள் கவிதை, கதை, கட்டுரை, கடிதம் ஆகியவற்றை உருவாக்க பயிற்சி ஆசிரியர் கற்பிக்க வேண்டியவற்றையும் இவ்வலகில் விளக்கப்பட்டுள்ளது.

## இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- மொழிப்பாடத்தில் படைப்பாற்றலின் தன்மையை அறியலாம்.
- மாணவர்களின் படைப்பாற்றலை வகுப்பறையில் வெளிக்கொணரலாம்.
- கதை, கவிதை எழுதும் திறனை மேம்படுத்தலாம்.
- சிறுகதை புனையும் தன்மையை வெளிப்படுத்தலாம்.
- கட்டுரை, கடிதம் எழுதும் ஆற்றலை வெளிப்படுத்தலாம்.

## பாட அமைப்பு


| | |
|---|---|
| **2.0** | **பாட முன்னுரை** |
| **2.1** | **மொழிப்பாடத்தில் படைப்பாற்றலின் இன்றியமையாமை** |
| 2.1.1 | மொழிப்பாடத்தில் இலக்கியம் கற்றல் |
| 2.1.2 | படைப்பின் உருவாக்கம் |
| 2.1.3 | படைப்புக் கற்பனை |
| **2.2** | **வகுப்பறைச் சூழலும் படைப்பாற்றல் வெளிப்பாடும்** |
| **2.3** | **கவிதையும் கதையும்** |
| 2.3.1 | கவிதை |
| 2.3.2 | கதை |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **2.4** | **கட்டுரையும் கடிதமும்** |
| 2.4.1 | கட்டுரை எழுதுதல் |
| 2.4.2 | கடிதம் எழுதுதல் |
| **2.5** | **படைப்பு வடிவ மாற்றம்** |
| 2.5.1 | வடிவம் மாற்றும்போது கவனிக்க வேண்டியவை |
| 2.5.2 | உரையாடலைச் செய்தியாக்குதல் |
| 2.5.3 | உரையாடலுக்கான செய்தி |
| 2.5.4 | கட்டுரையை உரையாடலாக்குதல் |
| 2.5.5 | கட்டுரைக்குரிய உரையாடல் |
| 2.5.6 | செய்தியைக் கவிதையாக்கல் |
| **2.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

## 2.0 பாட முன்னுரை

### பாட முன்னுரை

படைப்பாற்றல் என்பது பிறவியிலேயே அமைவது; இயற்கையானது; ஒருவரிடம் கற்பித்தலால் உருவாக்கப்படுவதன்று என்றுநிலை இருந்தது. அந்நிலைமாறி 'சித்திரமும் கைப்பழக்கமும் செந்தமிழும் நா பழக்கம்' என்னும் பழமொழிக்கேற்ப படைப்பாற்றலையும் வளர்த்துக் கொள்ள இயலும். அவ்வகையில் கற்பித்தல் மூலமாகச் சூழ்நிலையை உருவாக்கித் தருவதன் மூலமாகவும், வழிகாட்டுதல் மூலமாகவும் படைப்பாற்றலை உருவாக்க முடியும். என்பதில் மொழியாசிரியரின் பங்கு முதன்மையானது ஆகும். இவ்வலகில் மொழியாசிரியர் தம் மாணவர்களிடம் எவ்வாறெல்லாம் படைப்பாற்றலை வளர்க்கலாம். படைப்பாற்றல் பற்றிய சிந்தனைகள் என்னென்ன முறைகளில் வெளிப்படுத்தப்படும் என்பனவற்றையெல்லாம் காணலாம்.

## 2.1 மொழிப்பாடத்தில் படைப்பாற்றலின் இன்றியமையாமை

### மொழிப்பாடத்தில் படைப்பாற்றலின் இன்றியமையாமை

மொழியில் புதிய புதிய உத்திகளில் மனித உறவுகளைச் சொற்களுக்குள் கொண்டுவருதலைப் படைப்பாற்றல் என்று கூறலாம். நடைமுறையில் உள்ளதைவிட மேம்பட்ட நிலையில் புதிதாக ஒன்றை வெளிப்படுத்தலே படைப்பாற்றல் என்று கூறுவர்.

மொழிப்பாடத்தினைப் பயிலும் மாணவன், மொழியினைக் கற்று திறம்பட விளங்குகின்றான், அல்லது அம்மொழியில் சிந்திக்கின்றான் என்று அறிவதற்கு அவன் மொழியை வெளிப்படுத்தும் நிலையினைக் கொண்டு அறிய இயலும்.

இவ்வகையில் மொழியாசிரியர் அனைவரிடமும் படைப்பாற்றல் திறன் உள்ளது என்பதனை அழுத்தமாக உணர வேண்டும். மொழியாகப் படைப்பாற்றலை மாணவர்களிடம் வளர்க்கும் கடமை அவருக்குரியது ஆகும். மொழியினைக் கற்பிப்பதன் நோக்கமே அடிப்படைத் திறன்களையும் உயர்திறன்களையும் ஒருசேர மாணவர்பெறத் தூண்டுவது அல்லது துணை நிற்பது என்பதாகும்.

மொழியினைக் கற்பிக்கும் ஆசிரியர் சில வழிகளைக் கவனித்து படைப்பாற்றலை வளர்க்க உதவ முடியும். அவை முறையே,

- சூழ்நிலை
- ஆயத்த நிலை
- தகவல்களைத் திரட்டல்
- நெகிழ்ச்சி X இறுக்கம்
- குழுச்சிந்தனை
- திறனாய்வு
- மனப்பான்மையும் உணர்ச்சியும்
- உத்திகளும் நுட்பங்களும்

- **சூழ்நிலை**

மாணவர் எந்தப் பகுதியிலிருந்து, எந்தச் சூழ்நிலையிலிருந்து வருகிறார்கள் அல்லது வளர்கிறார்கள் என்பதை மொழி ஆசிரியர் அறிந்திருந்தால் அது மாணவரின் படைப்பாற்றலை வளர்க்க உதவியாக இருக்கும். மாணவர்கள் வாழ்கின்ற கிராம, நகரச் சூழல், மகிழ்ச்சியான மகிழ்ச்சியற்ற சூழல், மூத்த, இளைய குழந்தையாக வளர்ந்த சூழல் ஆகியவற்றை மனத்தில் கொண்டு ஆசிரியர் பட்டியல் ஒன்றைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

எந்தெந்த மாணவர் எந்தெந்தச் சூழலில் இருப்பர் என்பதையும் அவர்கள் சந்தித்த சிக்கல்கள் என்னென்ன என்பதையும் அவற்றை அவரகள் தீர்த்த முறைகள் யாவை, கண்ட தீர்வுகள் யாவை என்பனற்றையும் பட்டியலில் குறித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சந்தித்த சிக்கலைக் கதையாகயாட்டாக, வெவ்வேறு வடிவங்களில் மாணவரின் ஆர்வத்திற்கேற்ப எழுதச் சொல்லித் தூண்டலாம்.

- **ஆயத்த நிலை**

ஆயத்த நிலையில் இல்லாதபோது எந்த ஒரு செயலையும் சிறப்பாகச் செய்ய முடியாது. அதற்குப் படைப்பாற்றலைலும் விதிவலக்கன்று. முன்பு கூறியதுபோல் சிக்கலுக்கான தீர்வு என்பது படைப்பாற்றலின் அடித்தளம். எனவே மாணவர்கள்ச் சிக்கலைச் சந்திக்க ஆயத்தப்படுத்த வேண்டியது ஆசிரியர் கடமை.

சிக்கலுக்கான சூழ்நிலையைச் சொல்லி மாணவர் அந்த நிலையில் இருந்தால் என்ன செய்வர் எனக் கேட்டறியலாம்.

சிக்கல் வந்த பிறகு அதனைத் தீர்க்கவழி காண்பதைவிடச் செயற்கையான சிக்கலை உருவாக்கி, அல்லது கற்பனை செய்து அதற்கு என்ன தீர்வு

அளிக்கலாம் என்பது ஒரு பயிற்சியாக அமைந்து மாணவரைச் சிக்கல் தீர்ப்பதற்கான ஆயத்த நிலைக்குத் தயாராக்கும்.

- **தகவல்களைத் திரட்டல்**

எல்லாவற்றையும் கூர்ந்து நோக்குதல், அவற்றை மனத்தில் பதிந்து வைத்தல், பிறர் சிந்திக்காத கோணத்தில் வெவ்வேறு தகவல்களை ஒன்றொடு ஒன்று பொருத்திக்காட்டல், அவற்றை வரிசைப்படுத்தி அழகுபடுத்தி வெளியிடல் ஆகியன படைப்பு உருவாக்கல் முறைகளாகும். அதனால்தான் கவிதை என்றால் என்ன என்பதற்குச் "சிறந்த சொற்கள் சிறந்த வரிசையில் அமைதல்" (The best words in the best order) எனக் கூறுகின்றனர். கூர்ந்து நோக்கித் தகவல்களைச் சேர்த்து வைக்கவில்லை என்றால் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்க வழியில்லை. எனவே தகவல்களை முடிந்தவரைச் சேர்த்தல் என்பது சிறந்த படைப்பாற்றலுக்குவழி வகுக்கும் என்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். தகவல்களைச் சேகரித்தல் என்பது ஆழ்ந்த கவனித்தலில் வருவது என மாணவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

- **நெகிழ்ச்சி X இறுக்கம்**

நெகிழ்வுத் தன்மை என்பது படைப்பாற்றலுக்குத் தேவையான ஒன்றாக உள்ளது. இறுக்கம் என்பது ஒரு மனத்தடை. இந்த இறுக்கமானது மனத்தில் தகவல்கள் பதிவதையோ புதிய சிந்தனைகள் தோன்றுவதையோ அனுப்பதில்லை.

படைப்பு என்பது பல்வேறு வாய்ப்புகளைச் சீர்த்தூக்கிப் பார்த்து ஆராய்ந்து ஏற்புடைய ஒன்றைக் கொடுப்பதாகும்.

எனவே மாணவர் எதையும் ஏற்கும் நெகிழ்வு மனம் கொண்டவராக உருவாக்கப்பட வேண்டும். தாம் போகும் வழியே சரி என்று முரட்டுப் பிடிவாதம் பிடிப்பவராக மாறிவிடக் கூடாது.

- **குழுச்சிந்தனை**

நெகிழ்வு பெற்றிருப்பதால் எதையும் ஏற்கவும் சரி பார்க்கவும் மனம் தயாராக இருக்கிறது. தன் முடிவைக் கொடுக்க வேண்டும் என்பதைவிடச் சரியான முடிவைக் கொடுக்க வேண்டும் என்பதிலேயே நெகிழ்ச்சியான ஆர்வம் காட்டுகிறது.

சரியான முடிவு என்பது பிறர் கருத்தோடு ஒப்பிடுவதால் மட்டுமே கிடைக்கும். எனவே படைப்பாற்றலுக்கும் குழுச் சிந்தனை தேவைப்படுகிறது.

சில சமயங்களில் குழுச் சிந்தனையில் வலிமை மிக்க மாசவர்கள் திணிப்பு அல்லது ஆளுமை ஏற்பட வழியுள்ளது. ஆசிரியர் இவ்வாறு நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

- **திறனாய்வு**

'சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்' என்பார் திருவள்ளுவர். நிறைகளை மட்டும் போற்றுவதோ, குறைகளை மட்டும் கூறிக் கொண்டிருப்பதோ திறனாய்வாகாது. நிறைகுறை இரண்டையும் தன் முடிவிலும் பிறர் முடிவிலும் காணும் பொதுமை வேண்டும்.

இந்தத் திறனாய்வு, சரியான முடிவை எடுக்கத் தூண்டும். சரியான முடிவு என்பது சிறந்த படைப்பின் அடையாளம். மாணவர்களுக்கு எந்தக் கருத்தையும் திறனாய்வு செய்ய வாய்ப்பளிக்க வேண்டும்.'நான் சொல்கிறேன் நீ கேள்' என்ற மனப்பான்மை மாற வேண்டும்.

- **மனப்பான்மையும் உணர்ச்சியும்**

சில சமூக மனப்பான்மை படைப்பாற்றலைப் பாதிக்கின்றது. ஆண்கள் இதைச் செய்யலாம், இதைப் பேசலாம், பெண்கள் செய்யவோ, பேசவோ கூடாது என்பதும் மாறாகப் பெண்களுக்கு உரியன் இவை என்று பிரிப்பதும் சமூக நிகழ்வுகளாகவுள்ளன. இவற்றால் ஏற்படும் மனப்பான்மைகள் படைப்பை ஏதோ ஒரு வகையில் பாதிக்கின்றன.

படபடப்பான மனநிலை படைப்பாற்றலைத் தடை செய்வதை, கருத்தோட்டத்தைத் தடை செய்வதைக் காணலாம். கோபம், வெறுப்பு, எதிர்ப்புணர்ச்சி போன்றவையும் படைப்பாற்றலை ஊக்கப்படுத்தா. இத்தகைய உணர்ச்சிகளுக்கு ஆட்பட்ட ஒருவர் படிப்படியாகப் படைப்பாற்றலை இழக்கிறார். மனிதநேயத்தை இழக்கிறார். எனவே உயர்வு, தாழ்வு மனபான்மைகள், கோபதாப உணர்வுகள் கட்டுபடுத்தப்பட வேண்டியன என்பதையும் படைப்பாற்றலைத் தடைசெய்வன என்பதனையும் மாணவர்க்கு அறிவுறுத்துவது ஆசிரியர் பணியாகும்.

- **உத்திகளும் நுட்பங்களும்**

படைப்பாற்றலைச் சிறப்பாக வெளிப்படுத்துவன உத்திகளும் நுட்பங்களும் ஆகும். மிகப்பெரிய பாறையை உருட்டிச் செல்ல வேண்டும். அதற்குப் பலரின் மனித உழைப்பும் தேவை.

பண்படாத ஒரு பாமரனின் படைப்பிற்கும், பண்பட்ட தேர்ந்த படைப்பாளியின் படைப்பிற்கும் உள்ள வேறுபாடு அதனை வெளிப்படுத்தும் உத்தியிலும் நுட்பத்திலுமே அடங்கியுள்ளது.

ஆசிரியர் மாணவர்களுக்குப் படைப்பாற்றலின் தொழில் இரகசியமான உத்தியையும் நுட்பத்தையும் கற்பித்து பண்படா நிலையில் வெளிப்படும் அவர்களது படைப்பாற்றலைச் செம்மைப்படுத்த வேண்டும்.

### 2.1.1 மொழிப்பாடத்தில் இலக்கியம் கற்றல்

இலக்கியம் என்பது படிப்போரை இன்புறுத்தி அறிவுறுத்துவது ஆகும். இலக்கியமானது, சிறந்த கருத்துகளைச் சிறந்த சொற்களின் மூலம் சிறப்பான முறையில் வெளிப்படுத்துவதாக அமையும். அதற்கு ஏற்ப சொல்நயம், பொருள்நயம், ஓசைநயம், அணிநயம், யாப்பு அமைதி, கற்பனைநயம் முதலான பல நயங்களைக் கொண்டு விளங்கும். இவற்றைப் படித்து மகிழ்வதும் உள்ளக் கிளர்ச்சி பெறுவதும் அவற்றின் வழியாகப் படைப்பாற்றலைப் பெருக்குதலும் தாய்மொழி கற்பித்தலின் நோக்கமாக அமைகிறது.

முன்னர்க் கண்டவற்றை, அனுபவத்தால் பெற்றவற்றை மீண்டும் மனக்கண் முன்னிறுத்தி உணர்தலைக் கற்பனை எனலாம். இத்தகைய கற்பனைத் திறனை மாணவர்களிடம் வளர்த்தால், இலக்கிய ஆர்வம் பெருகுவதோடு அவர்களின் படைப்பாற்றல் வளரும். மேலும், சிறந்த இலக்கியங்களைப் படிப்பதால் மாணவர்கள் அழகுணர்ச்சியைப் பெறுவர். அழகுணர்ச்சியை வெளிப்படுத்தத் தெரிந்தோர் படைப்பாற்றலிலும் சிறந்து விளங்குவர் என்பதில் ஐயமில்லை.

### 2.1.2 படைப்பின் உருவாக்கம்

ஒரு படைப்பானது அனுமானம், காட்சி, அனுபவம் என்கிற வகையில் புனைவின் மொழியாக நிகழ்கிறது. தொடர்புபடுத்திக் கற்றல் (Learning by Association), உற்றுநோக்கிக் கற்றல் (Learning by Observation), அறிவு சார்ந்த கற்றல்

(cognitive Learning) போன்ற கற்பித்தல் அணுகுமுறைகளைப் படைப்புத் திறன் உருவாக்கத்தோடு ஒப்பிட்டு நோக்கலாம். ஏனெனில் இவ்வணுகுமுறைகள் அனைத்தும் படைப்பாக்கத்துடன் தொடர்புடையதாக அமைகிறது.

கற்றல் என்பது வகுப்பறையில் எழுத்துகளை, சொற்களை, தொடர்களைக் கற்றல் என்பதுடன் நின்றுவிடக் கூடாது. மொழிப் பாடத்தில் கற்றல் என்பது நடத்தையில் (Behaviour) அனுபவத்தில் (Experience) மாறுதலை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும். இம்மாற்றம் புதியதாக ஒன்றனை உருவாக்குவதற்கு உரமிடுவதாய் அமைதல் வேண்டும். எந்த ஒன்றனைக் கற்றாலும் அதனில் புதிய கோணம் ஒன்றனை உருவாக்கிச் சிந்தித்தல் வேண்டும். அத்தகு சிந்திக்கும் திறனை மாணவர்களிடம் உருவாக்குதல் வேண்டும்.

### 2.1.3 படைப்புக் கற்பனை

விடுகதைகள், பழமொழிகள், கதைப்பாடல்கள் என வடிவங்கள் பல உள்ளன. இவ்வகைப் படைப்புகளில் படைப்புக் கற்பனை (Creative imagination) வெளிப்படுவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

ஒரு குப்பியில் (பாட்டில்) இரண்டு தைலம் (எண்ணெய்)அது என்ன? எனக் கேட்கும்போது அவ்வரிகளுக்கான விடையினை அறிந்துகொள்வதில் ஆர்வம் கொள்கிறோம். ஒரு குப்பியில் இரண்டு தைலம் என்பது நமது கற்பனைக்குச் சவால் விடுகிறது. இப்புதிரை அவிழ்ப்பதற்கான பதிலை ஒவ்வொன்றாகச் சொல்லிப் பார்த்து கண்டுபிடிக்க முயல்கிறோம். இறுதியில் இதற்கான விடை 'முட்டை' என்று தெரிந்ததும் நமது உணர்வு வியப்பால் உந்துகிறது. முட்டைக்குள் வெள்ளைக் கருவும், மஞ்சள்கருவும் ஒன்றாக இருக்கிறது. ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டும், ஒரே தருணத்தில் இணைந்தும் பிரிந்தும் இருப்பது அதிசயத்தின் முடிச்சை அவிழ்க்கிறது எனலாம்.

## 2.2 வகுப்பறைச் சூழலும் படைப்பாற்றல் வெளிப்பாடும்

### வகுப்பறைச் சூழலும் படைப்பாற்றல் வெளிப்பாடும்

வகுப்பறை என்பது செங்கற்சுவர்கள் கொண்ட அறைதான். ஆனால் அந்த அறை வருவோரை ஈர்க்கும் சூழல் கொண்டதாக அமைய வேண்டும். வகுப்பறைத் தோற்றம், தூய்மை, வெளிச்சம், காற்றோட்டம், உட்புற அமைப்பு ஆகிய அனைத்து அழகுணர்ச்சியையும் வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

வகுப்பறைச் சூழல் என்பது நேரிடையாக மாணவர் கற்றல், சிந்தனை, கற்பனை, சிக்கலுக்குத் தீர்வு, அனுபவம் பகிர்வு, முடிவு எடுத்தல், ஆசிரியர் கற்பித்தல், ஆர்வமுட்டுதல், பாடப்பொருள் பயிற்றுவித்தல், செய்முறை /செயல் வழிகாட்டுதல், பயிற்சி, விளைவுகள், மதிப்பிடுதல் ஆகிய செயல்களுக்கான வளங்களை உள்ளடக்கியது.

### ஆசிரியர் கற்பித்தல் முறை

வகுப்பறையில் ஆசிரியர் மட்டுமே கற்பிப்பார் என்ற நிலை மாறியுள்ளது. ஒலி, ஒளிக்கருவிகள், கணினி போன்ற தொழில்நுட்பக் கருவிகள் நிறைந்து காணப்பெறுகின்றன. இச்சூழல் மாணவர்களின் சிந்தனை, கற்பனை வளத்தைத் தூண்டுவதோடு படைப்பாற்றல் திறனையும் வளர்க்கின்றன. ஆகவே, இவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களின் கற்பித்தல் முறை அமைதல் வேண்டும். ஒரு பாடத்தைக் கற்பிக்கும்போது, அதன் பாடப்பொருளில் மட்டுமே கவனம் செலுத்தாது, அதன்மூலம் குழந்தைகளின் சிந்தனைத் திறனைத் தூண்டுதல் வேண்டும்.

எ.கா :

**காக்கா கண்ணுக்கு மை கொண்டு வா**
**குருவி கொண்டைக்குப் பூ கொண்டு வா**
**கொக்கே குழந்தைக்குத் தேன் கொண்டு வா**
**கிளியே கிண்ணத்தில் தேன் கொண்டு வா**

இந்தக் குழந்தைப்பாடலின் வரிகளைக் கவனித்துப் பாருங்கள். இந்த வரிகளிலிருந்து சில பறவைகள் சிறகடித்துப் பறக்கின்றன. காகம், குருவி, கொக்கு, கிளி என்னும் பெயரில் அமைந்த பறவைகள் குழந்தைகளுக்கு அறிமுகம் ஆகின்றன. அந்தப் பறவைகளின் நிறங்கள் நினைவலைகளுக்குத் தாவுகின்றன. கறுப்புநிறம் (காக்கா), தவிட்டு நிறம் (குருவி) வெள்ளை நிறம் (கொக்கு), பச்சைநிறம் (கிளி) என நிறங்களின் உலகமாக கண் முன்னே விரியும். இவ்வாறு சொல்லிக்கொண்டே செல்லலாம். பாடலின் வரிகளிலிருந்து உருவாகும் பரந்துபட்ட அறிவினை இங்குக் காணலாம். இத்தகையதான அறிதல்முறையே குழந்தைகளின் படைப்புத் திறனை வளர்க்கும் வழியை உருவாக்கும்.

## 2.3 கவிதையும் கதையும்

### கவிதையும் கதையும்

கவிதை புனைதலும் கதை எழுதுதலும் படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தும் வாயில்கள் ஆகும்.

### 2.3.1 கவிதை

**"உள்ளத் துள்ளது கவிதை – இன்பம்**
**உருவெடுப்பது கவிதை:**
**தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை**
**தெரிந்து உரைப்பது கவிதை"**

எனக் கவிமணி தேசிகவிநாயகனார் எளியமுறையில் கவிதைக்கு விளக்கம் தருகிறார்.

இலக்கிய வகைகளில் முதலிடம் பெறுவது கவிதையே ஆகும். கவிதையின் கருத்து, கற்பனை, உணர்ச்சி, வடிவம் ஆகியவற்றின் ஒருங்கமைவும், ஒழுங்கமைவும் இதற்கான காரணம் எனலாம். 'ஒவ்வொரு கோணத்திலும் கவிதை என்பது உணர்ச்சிகளின் மொழி' என்கிறார் வின்செஸ்டர். எந்தப் பொருளைப் பற்றி வேண்டுமானாலும் கவிதை தோன்றும். கவிதை என்பது காணும் பொருள்களை வருணிப்பதில் இல்லை; அப்பொருள்களைக் காணும்பொழுது எழும் மனநிலையில்தான் உள்ளது.

'கவிதையில் சரியான வார்த்தைகள் சரியான இடத்தில் அமைய வேண்டும். கவிஞன் வார்த்தைகளை எடுத்துக் கோப்பதில்லை. உணர்ச்சியின் பெருக்கு, சரியான வார்த்தைகளைச் சரியான இடத்திற்குக் கொண்டு செல்கிறது' என்பார் புதுமைப்பித்தன். மேலும், 'கவிதை, மனிதனின் உணர்ச்சியில் பிறந்த உண்மை; மனித உள்ளம் யதார்த்த உலகத்துடன் ஒன்றுபட்டோ, பிரிந்தோ கண்ட கனவு; அது உள்ள நெகிழ்ச்சியிலே உணர்ச்சி வசப்பட்டு வேகத்துடன் வெளிப்படுவது' எனவும் உரைப்பார்.

கவிதை முருகியல் (aesthetics) உணர்ச்சியைத் தரக்கூடியது. உயர்ந்த கவிதைகள் யாவும் அவற்றில் ஈடுபட்டுப் படிப்போரிடம் கவிஞர்களின் அனுபவத்தையே பெற வைத்துவிடுகின்றன. அவர்கள் உணர்த்த விரும்பும் உண்மைகளையும் உணர்த்தி விடுகின்றன. கவிதைகளில் பெரும்பாலானவை பயிலும்போது இன்பம் தருவதுடன் உள்ளத்தைத் திருத்தும் பண்பையும் பெற்றிருப்பதால், அவை படிப்போரின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவனவாக உள்ளன.

## மரபுக் கவிதை

இலக்கண நூல்களைக் கற்றும், இலக்கியங்களை இடைவிடாது படித்தும், யாப்பு விதிகளையும், ஓசை நலன்களையும் உள்வாங்கிக் கொண்டு, சீரும் தளையும் சிதையாமல் வரையறுத்த அமைப்பில் பாப்புனைவது மரபுக்கவிதை எனப்படும். இலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் உணர்ச்சி வெளிப்படப் பாடுவது புதுக்கவிதையாகும். இவையன்றி இசைப் பாடல்களும் (சந்தப் பாடல்கள்) கவிதை என்பதற்குள் அடங்குவனவாகும்.

கவிதை வகைமைகளில் தொன்மையானதாக அறியப்படுவது மரபுக் கவிதையாகும். தமிழில் உள்ள யாப்பிலக்கண நூல்கள் மரபுக் கவிதை இயற்றும் முறையை எடுத்துரைக்கத் தோன்றியனவேயாகும். யாப்பு வடிவத்திற்கு அடிப்படை சந்தமும் (Rhythm), தொடையும் ( Rhyme) ஆகும். சந்தம் என்பது அழுத்தமான ஓசையும் அழுத்தமில்லா ஓசையும் சீர்பட அடுக்கி வருவதைப் பொறுத்தது. அழுத்தமுள்ள ஓசையும் அழுத்தமில்லாத ஓசையும் மாறி மாறி இடம்பெறுவதால் ஒரு நயமான ஓசை பிறக்கிறது. மரபுக் கவிதைகள் ஒரு காலத்தில் இசையோடு பாடப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் இவை படிக்கப்படுவனவாக மட்டுமே அமைந்துவிட்டன. சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையில் தமிழிலக்கிய நெடும்பரப்பில் செங்கோல் செலுத்தி வந்த பெருமை மரபுக்கவிதைக்கே உரியது.

## புதுக்கவிதை

யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகளுக்குச் சுதந்திரமான எழுத்துருவம் கொடுக்கும் வகையில் உருவானதே புதுக்கவிதை. இது, வேண்டாத சொற்களைத் தவிர்த்துச் சுவை மிளிர நடைமுறைச் சொற்களால் கருத்தை உணர்த்துவதாகும். புதுக்கவிதை கி.பி. இருபதாம் நூற்றாண்டு முதல் தமிழிலக்கியத்தில் தோன்றிச் சிறந்து விளங்குகிறது. பாரதியார் எழுதிய வசன கவிதைகளே தமிழில் காணும் புதுக்கவிதை முறைக்கு முன்னோடி எனலாம்.

**எ.கா :**

**இருட்டு**

செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு
சிந்தை அறிவினிலும் தனி இருட்டு
சுமையகற்றிச் சுமையேற்றும்
சுமை தாங்கியாய் விளங்கும்

சுமைக்குள்ளே தானியங்கிச்
சுமையேற்றும் சும்மாடே.....

– புதுமைப்பித்தன்.

## ஆசிரியரின் கடமைகள்

ஆசிரியர், மாணவர்களிடம் கவிதை எழுதும் ஆற்றலை வளர்க்க கீழ்க்காணும் பண்புகளைப் பெற்றவராக விளங்குதல் வேண்டும்.

- ஆசிரியர் கவிதை புனையும் ஆற்றல் உள்ளவராக இருத்தல்; அல்லது அனுபவிக்கும் ஆற்றல் உடையவராக இருத்தல்.
- கவிதை அனுபவத்தை மாணவர்க்குக் கூறி, அக்கவிதை இன்பத்தை அனுபவிக்கச் செய்தல்.
- பண்டைக் காலந்தொட்டுச் சமூக நோக்கிலும், அரசியல் நோக்கிலும் ஏனைய மருத்துவம், ஜோதிடம் போன்ற அவ்வத்துறை சார்ந்த நோக்கிலும் 'கவிதை' பெற்றிருந்த சிறப்பிடத்தை மாணவர்க்கு உணர்த்தல்
- மரபுக் கவிதைக்கு அழகு சேர்ப்பது அக்கவிதையின் வடிவம். எனவே எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய கவிக்கூறுகளாகிய யாப்பிலக்கண அறிவை மாணவர்க்கு உண்டாக்குதல்.
- எளிய சொற்களைக்கொண்டு தாமறிந்த பொருள்பற்றிக் கவிதை புனையச் செய்தல்
- அகர வரிசையில் கவிதை எழுதச் செய்தல்.
- சங்க இலக்கியப் புலவர்கள்முதல் பிற்காலக் கவிஞர்கள்வரை பாடிய பாடல்களைப் படிக்கும் ஆர்வத்தை உண்டாக்குதல்.
- கற்றல், கற்பித்தல் சூழலில் பாடநூல்களில் உள்ள கவிதைகளை ஈடுபாட்டுடன் கற்கச் செய்து 'போலச் செய்தல்' முறையில் மாணவர்களைக் கவிதை புனையச் செய்தல்.
- எந்தப் பொருளையும் நுணுகிப் பார்த்துச் சிந்திக்கச் செய்து அவற்றுக்குக் கவிதை வடிவம் தரச் செய்தல்.
- பள்ளி இலக்கிய மன்றங்களில் கவியரங்கம், கவிதைப் போட்டி ஆகிய நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி மாணவரைப் பங்குபெறச் செய்தல்.

## கவிதை எழுத விழைவோர் கருத்தில்கொள்ள வேண்டியவை

- எதனைப் பற்றிக் கவிதை எழுதவேண்டும் என்ற பாடுபொருள் பற்றிய தெளிவு வேண்டும்.

- கவிதை படைப்பதற்கு மிகுந்த சொல்வளம்/ சொற்களஞ்சியம் தேவை. ஆதலால், மிகச் சிறந்த கவிதை நூல்களைப் படித்து முடிந்த அளவுக்குப் பாடல்களை மனனம் செய்து கொள்ள வேண்டும்.
- சிறந்த கவிஞர்களின் சொல்நயம், பொருள் நயம், உவமைநயம், கற்பனை வளம், சொல்லாட்சித் திறன் ஆகியவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டும்.
- ஒலிநயமிக்க சந்தப் பாடல்களை வாய்விட்டுப் படித்துச் சந்தத்தையும் தாளக் கட்டையும் மனத்தில் பதித்தால் அவற்றைக்கொண்டே கவிதை புனையலாம்.
- நகை, அழுகை, அச்சம், பெருமிதம் போன்ற உணர்ச்சிகளில் தெளிவுபெற வேண்டும்.
- ஆத்திசூடிபோல் ஒருவரிக் கவிதைகள் எழுதிப் பழகுவதைத் தொடக்கநிலைப் பயிற்சியாக மேற்கொள்ளலாம்.
- ஒப்பீடு செய்தல், உருவகப்படுத்துதல் முதலானவையும் கவிதை எழுதத் துணை செய்யுமாகலின், அவற்றில் பயிற்சி செய்யலாம்.
- அழகுணர்ச்சி, சமுதாயப் பார்வை, உற்றுநோக்குதல், சொற்பொருள் பயிற்சி, சிந்தனைத் தெளிவு ஆகிய அடிப்படைப் பண்புகளில் கவிதைத்திறன் வளர்ப்போர் பெரிதும் ஈடுபாடு கொள்ளுதல் வேண்டும்.
- தொடக்கநிலைக் கவிஞர்கள் முதலில் மரபுக் கவிதைகளில் எழுதிப் பழகுதலே நலம் பயக்கும். மரபில் வேரூன்றிப் புதுமையில் கிளை பரப்பலாம்.
- மரபுக் கவிதைகள், உரைநடைக் கவிதைகள் (புதுக்கவிதைகள்), ஹைக்கூக் கவிதைகள், குறும்பாக்கள், நறுக்குக் கவிதைகள் எனப் பலவாக வெளிவந்துள்ள கவிஞர் பலரின் படைப்புகளைப் படிப்பதால் கவிதை எழுதவேண்டும் என்னும் ஆர்வம் பெருகும். அந்த ஆர்வமே, கவிதை எழுத விழைவோர்க்குக் கருவாக அமையும். அக்கரு பின்னர்க் கவிதையாக உருவாகும்.

### கவிதை எழுதும் திறனை வளர்க்கும் செயல்பாடுகள்

கீழ்க்காணும் பயிற்சிகளை மாணவர்களுக்கு ஆசிரியர் வழங்குவதன் மூலம் கவிதை எழுதும் திறனை வளர்க்க இயலும்.

- ஆளுக்கு ஓர் அடியாகச் சொல்லி ஒரு கவிதையைக் குழுவாகச் சேர்ந்து எழுதச்செய்யலாம்.
- பாடலின் பாதியைக் (முன் பாதி / பின் பாதி) கொடுத்து மீதியை எழுதச் செய்யலாம்.

- குறிப்பிட்ட பொருள்/ விலங்கு/ பறவை/ நிகழ்ச்சி/ தலைவர் குறித்துக் கவிதை எழுதச் செய்யலாம்.
- ஒரு காட்சியைக் (படம்/ நேரடிக் காட்சி/ எழுதியது) கொடுத்து அதைக் கவிதையாக்கச் செய்யலாம்.

### 2.3.2 கதை

கதை எழுத முனையும் குழந்தைகளின் முதற்படி சிறுகதை எழுதுதல். சிறுகதை, உரைநடைப் படைப்பிலக்கியத்திற்கு உரியது. 20ஆம் நூற்றாண்டின் புதுமைகளாக இது உருவாகியுள்ளது. நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள், கற்பனைகள் சிறுகதைகளாக மலர்கின்றன. இக்காலப் படைப்பிலக்கியங்களுள் சிறந்ததாகச் சிறுகதை இலக்கியம் கருதப்படுகிறது. உயிராக உணர்ச்சியும், உருவமாக மொழியும் அமைந்து சிறுகதை வாழ்வு பெற்றுள்ளது. மக்களை இன்புறுத்தும் வகையிலும், அறிவுறுத்தும் வகையிலும் சிறுகதைகள் தோன்றியுள்ளன.

### சிறுகதை எழுதும் திறன் வளர்த்தல்

சிறுகதைகள் படிக்கும் ஆர்வமே சிறுகதை எழுதுவதற்கான மூல விதையாக அமையும். மேலும் கீழ்க்காணும் பயிற்சிகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டால் சிறுகதை எழுதும் திறனைப் பெறலாம்.

1. சிறந்த எழுத்தாளர்களின் படைப்புகளைப் படித்தல்
2. கதை படித்துக் குறிப்பெடுத்தல்
3. காணும் நிகழ்ச்சிகளைக் கதையாக எழுதுதல்
4. பாதிக் கதையை உருவாக்குதல்
5. கதையினைத் தொடங்குதல்
6. கதையின் முடிவினை மாற்றுதல்
7. கதையின் கருபொருளைக் கூறல்
8. சிறுகதைப் போட்டிகள் நடத்துதல்
9. இதழ்களில் படைப்புகளை வெளியிடுதல்

### 1. சிறந்த எழுத்தாளர்களின் படைப்புகளைப் படித்தல்

புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், கு.ப.இராஜகோபாலன், கல்கி, அழகிரிசாமி, கி.வா. ஜகந்நாதன், அகிலன், முதலிய முன்னிலை எழுத்தாளர்களின் சிறு கதைகளைத் தேடிப் படிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வாராகில் அக்கதையாசிரியர்கள் கதைக் கருவைத்

தேர்ந்தெடுக்கும் முறை, அக்கதையைப் படைத்துக்காட்ட உருவாக்கும் கதை மாந்தர்கள், அம்மாந்தரைக் கொண்டு கதையை நடத்திச் செல்லும் அணுகுமுறை, அக்கதைகட்கேற்பக் கையாளும் மொழிநடை, கதைப் பொருளுக்கேற்ப அமைத்துக்கொள்ளும் கதையின் வடிவ அளவு, அக்கதைவழி அவர்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகள் முதலியவற்றை அறிந்து அவற்றைத் தம் சிறுகதைப் படைப்புகளில் பயன்படுத்த பெரும் வாய்ப்பாக அமையும்.

### 2. கதையைப் படித்துக் குறிப்பெடுத்தல்

சிறுவர் இதழ்களில் இடம்பெறும் கதைகளைப் படித்துக் குறிப்பெடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் கதை பற்றிய தெளிவினை அடையலாம்.

### 3. காணும் நிகழ்ச்சிகளைக் கதையாக எழுதுதல்

தங்கள் வாழ்வில் அன்றாடம் கண்ட, கேட்ட நிகழ்ச்சிகளைச் சிறுகதையாக எழுத முயற்சி செய்யலாம்.

### 4. பாதிக் கதையை உருவாக்குதல்

பாதிக் கதையைக் கூறி, மீதிக் கதையை மாணவரைக் கொண்டு முடிக்கச் செய்தல். கதையானது முதல் பாதியாகவோ, பின் பாதியாகவோ அமையலாம்.

### 5. கதையினைத் தொடங்குதல்

வகுப்பறைச் சூழலில் ஒரு சிறுகதைக்கான தொடக்கத்தை ஆசிரியர் அல்லது மாணவர் கூற, மற்ற மாணவர் ஒவ்வொருவராக அக்கதை வளர்ந்து முடியும் போக்கில் கூறச் செய்தல் வேண்டும்.

### 6. கதையின் முடிவினை மாற்றுதல்

ஏதேனும் ஒரு கதையினை முதலில் கூறுதல் வேண்டும். பின்பு அதன் முடிவினை மாணவர்களின் கருத்தோட்டத்திற்கு ஏற்ப மாற்றச் செய்யலாம்.

### 7. கதையின் கருப்பொருளைக் கூறல்

கதைக்கான கருப்பொருள் ஒன்றைக் கூறி எழுதச் செய்தல் வேண்டும். கதையின் கருப்பொருளில் இருந்து விலகாது கதை எழுதுவதற்கு ஏதுவாக இது அமையும்.

### 8. சிறுகதைப் போட்டிகள் நடத்துதல்

சிறுகதைப் போட்டிகள் நடத்தி மாணவரைப் பங்குபெறச் செய்தல் வேண்டும். போட்டி மனப்பான்மை மாணவருக்கு ஏற்பட்டால் அவர்களின் படைப்பாற்றல் திறனில் முன்னேற்றத்தைக் காணலாம்.

### 9. இதழ்களில் படைப்புகளை வெளியிடுதல்

சிறுவர் இதழ்களில் மாணவர் தம் சிறுகதைகள் இடம்பெறுவதற்காக ஆசிரியர் நெறிப்படுத்துதல் வேண்டும். மேலும், வகுப்பறை கையெழுத்து இதழ்கள், பள்ளி கையெழுத்து இதழ்கள் ஆகியனவற்றை உருவாக்கிச் சுழற்சி முறையில் மாணவர் அனைவரையும் அவ்விதழில் சிறுகதை எழுத ஊக்குவிக்கலாம்.

### ஆசிரியர் கருத்தில்கொள்ள வேண்டியவை

மொழி ஆசிரியரின் ஈடுபாடே மாணவர்களின் படைப்பாற்றல். எனவே, கதை கூறும் ஆசிரியர் கீழ்க்காண்பனவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

- நல்ல உணர்ச்சியுடனும் உற்சாகம் ஏற்படுமாறு ஆர்வத்துடன் சொல்ல வேண்டும்.
- எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில், கதை நிகழ்ச்சிக்குத் தக்கபடி, முகபாவம், குரல் முதலியவற்றை மாற்றிக் கதைகள் கூற வேண்டும்.
- அளவுக்கு மீறிய உடல் அசைவுகள், குழந்தைகளின் கவனத்தைச் சிதறடிக்கும். எனவே, மிகுந்த கவனத்துடன் கையாள வேண்டும்.
- குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப கதைகள் அமைதல் வேண்டும்.
- கதையைப் போலச் செய்தலின்றிச் சொந்த நடையில் கூற வேண்டும்.
- கதையில் உள்ள நீதியினைப் படங்களைப் பயன்படுத்தி விளக்கிக் கூற வேண்டும்.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
|---|
| 1. மொழிப்பாடத்தில் படைப்பாற்றலின் இன்றியமையாமையை விளக்குக. |
| 2. வகுப்பறைச் சூழலில் படைப்பாற்றல் வெளிப்படுத்தும் முறைமைகளை எழுதுக. |
| 3. கவிதையைப் படைக்கும் முறைமையை விளக்குக. |
| 4. கதை எழுதும்போது வெளிப்படுத்தப்படும் மொழித்திறனைக் குறித்து எழுதுக. |

## 2.4 கட்டுரையும் கடிதமும்

### கட்டுரையும் கடிதமும்

மொழியின் உரைநடை அமைப்புகளில் கட்டுரை மற்றும் கடிதம் எழுதுதல் நடைமுறை பயனுடைதாகும். அவ்வகையில் ஒரு கட்டுரையினை வடிவமைப்பது பற்றியும் கடிதத்தினை உருவாக்குவதனைப் பற்றியும் இங்குக் காணலாம்.

### 2.4.1 கட்டுரை எழுதுதல்

ஒரு பொருள் பற்றிய கருத்துகளை ஒழுங்குபடுத்திப் பொருள் செறிவோடு, விளக்கமான நடையில் எடுத்துரைப்பதே கட்டுரையாகும். 'ஒரு பொருளைப் பற்றி இலக்கண முறையில் கட்டுரைப்பது கட்டுரை', 'கட்டுரையாவது வகைப்படுத்திக் கூறுதல்', 'உள்ளத்தில் தோன்றுவதைக் கட்டுரைப்பது கட்டுரை' 'அழகு நிரம்பிய உரையைக் கட்டுரை என்கிறோம்'என்று இவ்வாறெல்லாம் அறிஞர்கள் கட்டுரைக்கு விளக்கம் தருகின்றனர்.

கோவையாகக் காரண காரியத் தொடர்பில் அழகான மொழிநடையில் அமைப்பது கட்டுரையாகும். இயற்கையில் மனத்தில் தோன்றி எழும் எண்ணங்கள் மொழியைப் பொருத்தவரையில் இருவகையில் வெளிப்படும். ஒன்று வாய்மொழி: மற்றொன்று எழுத்து மொழி. பேச்சில் வெளிப்படும் எண்ணங்கள் எழுத்து வடிவம் பெறாமல் நிலைக்க இயலாது. இவை சிறந்தனவாய், கேட்க வாய்பில்லாத பிறரும் படிக்கத்தக்கனவாய் எக்காலத்தும் நிலைப்புப் பெறத் தகுதியுடையனவாய் இருக்க வேண்டுமெனில் இவை எழுத்து வடிவம் பெறவேண்டும். எழுதி வைக்கும் பழக்கம் இல்லையேல் மனித நாகரிகம் இன்றிருப்பது போலச் சிறந்து வளர்ந்தோங்கி இருக்காது. எழுத்து மொழியால்தான் ஒரு தலைமுறையின் அறிவுச் செல்வம் அடுத்த தலைமுறைக்குப் பயன்பட வாய்ப்புண்டாகிறது. இவ்வகையில் கட்டுரை வரைதல் உயர்நிலைத் திறனாக மதிக்கப்படுகிறது.

### கட்டுரை அமைப்பு

கட்டுரையின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காண்போம். எந்தப் பொருளைப் பற்றிக் கட்டுரை எழுதினாலும் அது, முன்னுரை, பொருளுரை, முடிவுரை ஆகியவற்றைக் கொண்டு விளங்கவேண்டும். முன்னுரையும் முடிவுரையும் ஒவ்வொரு பத்திக்குள் அமைய வேண்டும். முன்னுரையானது

எழுதப் புகும் கருத்தை வகுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். முடிவுரையானது சொல்லப்பட்ட கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். ஒரு கட்டுரையில் முன்னுரையையும் முடிவுரையையும் படித்தாலே கட்டுரையின் சிறப்புத் தன்மை விளங்க வேண்டும்.

பொருளுரையானது எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக்கிக் கூறும் பகுதி ஆகும். ஆதலின் அதைப் பல பத்திகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். எடுத்துக்கொள்ளும் பொருளுக்கு ஏற்ப உள் தலைப்புகள் பலவற்றைக் கொண்டதாகப் பொருளுரை விளங்க வேண்டும்.

கட்டுரையானது சுருக்கமாகக் கூறினால் குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றி ஒரு கட்டுக்கோப்புடன் யாவரையும் ஈர்க்கும் முறையில் அமைக்கப்படுவதைக் 'கட்டுரை' எனலாம். கட்டுரையானது சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நன்மொழி கூறல் முதலான அழகுகளைப் பெற்றிருக்க வேண்டும். கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மற்றொன்று விரித்தல் முதலானவை இல்லாமல் எழுதுதல் வேண்டும். மேலும் படைப்பாளரின் அறிவாற்றலை வெளிப்படுத்துவதோடு படிவப்பவர்களின் சிந்தனையைத் தூண்டுவதாகவும் கட்டுரை அமைதல் வேண்டும்.

### கட்டுரை எழுதுவோருக்கான பொதுவிதிகள்

கட்டுரை எழுதுவோர் கீழ்க்காணும் பொதுவிதிகளை மேற்கொள்ள வேண்டும்.

1) செய்திகளைத் திரட்டுதல்
2) திரட்டிய செய்திகளை முறைப்படுத்துதல்
3) உரிய பக்கத் தலைப்புகள் கொடுத்துப் பத்தி அமைத்தல்
4) மேற்கோள்கள், பழமொழிகள் திரட்டுதல்
5) பல்வகையான தொடர்களைப் பயன்படுத்துதல்
6) நடை அழகு
7) நிறுத்தக் குறியீடுகள் பயன்படுத்தி எழுதுதல்
8) நல்ல கருத்துகளை எடுத்தாளும் திறனுடன் இருத்தல்
9) மீள் பார்வை செய்தல்
10) அழகாக, தெளிவாக, உரிய வடிவத்துடன் எழுதுதல்

இவ்விதிகளைப் பின்பற்றிக் கட்டுரை எழுதினால், கட்டுரை எழுதும் திறன் செம்மையுறும்.

## கட்டுரை எழுதும் வழிமுறைகள்

1) கட்டுரை எழுதுவதற்குப் பொருத்தமாகக் குறிப்புச் சட்டகம் தயாரித்துக்கொள்ள வேண்டும்.
2) கட்டுரை எழுதப் பயிற்சி அளிக்கும்போது தொடக்கத்தில் தலைப்பு அத்தலைப்புத் தொடர்பான நூல்களைப் படித்துக் குறிப்பெடுத்து வர பயிற்சி அளித்தல் வேண்டும்.
3) கருத்துச் சிதையாதவாறு பத்தி பிரித்து எழுதவேண்டும்.
4) மரபுத்தொடர்கள், வருணனைத்தொடர்கள், சொல்லாட்சிகள், மேற்கோள்கள் இவற்றைக் கட்டுரையோடு எழுதப் பயிற்சி அளிக்கலாம்.
5) கட்டுரை எழுதுவதில் படிப்படியாகப் பயிற்சித் தருதல் வேண்டும். அதாவது, எளிமையிலிருந்து அருமை என்ற நிலையை மனத்தில் கொண்டு கட்டுரை எழுதச் செய்தல் வேண்டும்.
6) கட்டுரையில் தொடர், உரைநடைப் பயிற்சி இன்றியமையாதது.

## கட்டுரை எழுதுவதற்கான வளர்ச்சி நிலைகள்

கட்டுரை எழுதுவதற்கான பயிற்சி அளிப்பதற்கு முன் வாய்மொழியாக ஒரு பொருளைப்பற்றி இலக்கணப் பிழையின்றி உரையாடுவதும் விவாதிப்பதும் இருக்க வேண்டும். வகுப்பில் ஆசிரியரும் மாணவரும் கட்டுரை எழுதுவதற்குத் தேவையான கலைச்சொற்கள், தொடர்கள், தொடக்கம், விளக்கம், முடிவு முதலியவற்றை வாய்மொழி வாயிலாக விவாதித்து அதன்பின் எழுத வேண்டும். கட்டுரை எழுதுவதற்குப் பின்வரும் படிமுறைகளில் பயிற்சி தருதல் வேண்டும்.

## முதல் வகைப் பயிற்சி

தலைப்பை மையமாகக் கொண்டும் அதில் இடம்பெறும் கருத்துகளை மையமாகக் கொண்டும் முன்னுரை எழுத வேண்டும். பொருளுரையை மூன்று அல்லது நான்கு சிறு தலைப்புகளாகப் பிரித்துக் கொண்டு தலைப்பிற்கேற்ற கருத்துகளை எழுதச் செய்ய பயிற்சி அளித்தல் வேண்டும். தலைப்பில் இடம்பெற்றுள்ள கருத்துகளின் தொகுப்பாக முடிவுரை இருத்தல் வேண்டும்.

## இரண்டாம் நிலைப் பயிற்சி

அடுத்தாக மற்றவர்கள் உதவியின்றி தாமாக எழுதும் பயிற்சியைத் தர வேண்டும். மாணவர்கள் பார்த்து, கேட்டறிந்த கதை, கட்டுரைகள், படக்கட்டுரைகளின் பொருளைக் கட்டுரையாக எழுத பயிற்சியளித்தல் வேண்டும்.

### மூன்றாம் நிலைப் பயிற்சி

ஆசிரியரின் வழிகாட்டுதலின்றி வருணனைக் கட்டுரைகள், கற்பனைக்கட்டுரைகள், கருத்தியல் கட்டுரைகள், தன்வரலாற்றுக் கட்டுரைகளைத் தாமாக எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும்.

### மொழிப்பயிற்சி

மொழிப்பயிற்சியே கட்டுரை எழுதுவதற்கான சிறந்த பயிற்சியாக இருப்பதால் பழமொழிகள், பொன்மொழிகள், மரபுத் தொடர்களைக் கையாளும் பயிற்சியைத் தர வேண்டும். உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை, செய்வினை, செயப்பாட்டு வினை, தன்வினை, முன்னிலை வினை, ஏவல் வினை, நேர்க்கூற்று, அயற்கூற்று எனப் பலவகைத் தொடர்களைப் பத்திகளில் எழுதுவதற்குப் பழக்குவதோடு நிரல்பட எழுதும் பயிற்சியும் தந்தால் கட்டுரை எழுதும் திறன் சிறப்பாக அமையும்.

### 2.4.2 கடிதம் எழுதுதல்

மனிதன் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்ட பின்பு தொலைவில் இருப்போர்க்குத் தன் கருத்தைத் தெரிவிக்கும் விதமாகப் புறாவின் காலில் கடிதத்தைக் கட்டி அனுப்பினான். அஞ்சல் தூதுவனானப் புறா பிற்காலக் கடித அஞ்சல் முறைக்கு முன்னோடியாகத் திகழ்கிறது எனலாம்.

கடிதம் உரிய வடிவுடன் பொருள் செறிவாலும் கற்பனை நயத்தாலும் சிறக்கும் போது கடித இலக்கியமாக உருப்பெறுகிறது. கடித இலக்கியத்தை முற்றிலும் உரைநடைக்கே உரியது எனக் கூறமுடியாது. காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கடித இலக்கியத்தின் தோற்றுவாய் உள்ளது. செய்யுள் உலகிலோ சீட்டுக்கவி என அது புகழ் பெற்றது. தூது என்ற சிற்றிலக்கியம் உள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழில் உள்ள தூது இலக்கியங்கள் கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் ஊடகத் தன்மை கொண்டுள்ள பாங்கில் கடிதத்தின் தன்மை கொண்டுள்ளதைக் காணலாம்.

கடித முறை பரவலான பின்பு உலகை இணைக்கும் தொடர்புக் கருவியாகக் கடிதம் திகழ்ந்தது. கடிதமுறை புழக்கத்தில் இருந்த கால எல்லையில், மாணாக்கர்கள் பேனா நண்பர்கள் என்னும் பெயரில் கடிதங்கள் எழுதி உலக அளவில் தங்கள் தொடர்புகளை வளர்த்துக் கொண்டனர்.

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தம்மைப் புரந்த புரவலர்களுக்கு எழுதி அனுப்பிய 'சீட்டுக் கவிகள்' யாவும் பாடல் வடிவில் அமைந்த கடிதங்களே.

### கடிதம் எழுதும் நோக்கங்கள்

1) தொலைவில் உள்ளவரிடம் தொடர்புகொள்ளல்.
2) வாய்மொழியால் சொல்ல இயலாதவற்றை அறிவித்தல்.
3) பயணச் செலவையும், காலம் வீணாவதையும் தவிர்த்தல்.
4) உறவை மேம்படுத்துதல்,
5) தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல்.
6) பாராட்டுகள் வழங்குதல்.
7) நன்றி தெரிவித்தல்.
8) உள்ளத்துணர்வை எழுத்துருவமாக்கல்,
9) கற்பனையாற்றல் வளர்த்தல்.
10) கோவையாக எழுதுந்திறன் வளர்த்தல்.

போன்ற பற்பல நோக்கங்கள் 'கடிதம்' எழுதுவதால் நிறைவேற்றப்படும்.

### கடித வகைகள்

கடிதங்களை இருவகைப்படுத்தலாம். அவை,

1) உறவுமுறைக் கடிதம்
2) அலுவலகக் கடிதம்

இவ்விருவகைக் கடிதங்களையும் வடிவ நிலையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

அவையாவன: 1. முன் பகுதி, 2. உடற் பகுதி, 3. இறுதிப் பகுதி என்பன.

### உறவுமுறைக் கடிதம்

உறவினர், நண்பர் ஆகியோர் நலன் அறிதல், ஒருவரைப் பிறர்க்கு அறிமுகப்படுத்துதல், ஒருவர்க்கு உதவி செய்யப் பரிந்துரைத்தல், பிறர்தம் நன்மை கருதி வாழ்த்துரைத்தல், பணி வேண்டுதல், முறையீடு செய்தல் முதலிய பல்வேறு சூழ்நிலைகளில் நாம் கடிதங்களை எழுதுகின்றோம். ஆங்கிலம் முதலிய

அயல்மொழிகளில் கடிதம் எழுதுதல் ஒரு தனிக்கலையாகவே வளர்ந்துள்ளது; சிறந்த இலக்கியத் தகுதியும் பெற்றுள்ளது. நேரு. தன்மகள் இந்திரா காந்திக்கு எழுதிய கடிதங்களும், பேரறிஞர் அண்ணாதுரை எழுதிய கடிதங்களும், தமிழறிஞர் மு. வரதராசனார் எழுதிய கடிதமுறை நூல்களும், 'ஆலிவர் கோல்ட்ஸ்மித்' என்பார் சீனத் தத்துவ அறிஞர் நிலையிலிருந்து எழுதிய கடிதங்களும் இலக்கிய நிலையில் உயர்தகுதி உடையவை.

## உறவுமுறைக் கடிதம் எழுதும் படிநிலைகள்

### 1. அனுப்புநர் முகவரி

இது கடிதத் தலைப்பகுதியின் வலப்பக்க மேல்முனையில் அமைவது. அனுப்புநர் பெயரைத் தவிர்த்து முகவரியை மட்டும் எழுதவேண்டும்.

### 2. விளி (அழைப்பு)

இது கடிதத்தின் இடப்பக்கம் அமைவது. இதைக் கடிதம் எழுதுவோர்க்கும் பெறுவோர்க்கும் உள்ள உறவுக்கேற்ற சொற்களாக அமைக்கலாம்.

### 3. கடிதச் செய்தி/கடிதப் பொருட் பகுதி

இது விளித்தொடருக்குக்கீழ் அமைவது. இதன் அளவும் பொருளும் கடிதம் எழுதுவோரின் எண்ணத்தைப் பொருத்தமையும். இனிய, எளிய தெளிவான தொடர்களாக அமைப்பது நலமாக இருக்கும். கடிதத்தைப் பெறுவோரின் அறிவுத் தகுதிக்கேற்ற மொழிநடையைப் பின்பற்ற வேண்டும். நம் மொழிப்புலமையைக் காட்டும் களமாகக் கடிதம் அமைதல் கூடாது.

### 4. வணங்கற் பகுதி

இது கடிதச் செய்தியின்கீழ் வலப்பகுதியில் அமைவது. இதில் கடிதம் எழுதுவோர்க்கும் பெறுவோர்க்கும் உள்ள உறவுக்கேற்ற தொடர்கள் அமையும்.

### 5. ஒப்பப் பகுதி

இது வணங்கற் பகுதிக்குக்கீழ் அனுப்புநர் கையொப்பம் இடுவது ஆகும். தமிழைத் தாய்மொழியாக உடைய நாம் எவ்விடத்தும் நம் கையொப்பத்தைத் தமிழில் இடுவதே நமக்கேற்ற தகுதியாகும். இதைக் கவனத்திற்கொண்டு இளம்பருவமுதல் தமிழில் கையெழுத்திடுவதையே வழக்கமாகக் கொள்ளவேண்டும்.

## 6. பெறுநர் முகவரி

கடிதம் ஒற்றைத் தாளாக இருப்பின், கையொப்பப் பகுதியின் நேர் இடப்பக்கம் கீழ்ப் பகுதியில் இது அமைவது. பெறுநரின் பெயர் உள்ளிட்ட தெளிவான முகவரியை அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் முடியுமாறு எழுதவேண்டும். அஞ்சலட்டை, அஞ்சலுறைக் கடிதமாக இருப்பின் பின்புறத்தில் கடிதம் பெறுவோர் முகவரிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அவர் முகவரியை எழுதவேண்டும்.

**உறவுமுறைக் கடிதம்**

(மாதிரி)

எண்: 11, அழகேசன் நகர்.
செங்கல்பட்டு.
செங்கல்பட்டு மாவட்டம், 603 110.
20.07.2022

அன்புத் தோழி!

நலம், நலமறிய ஆவல். நான் சென்ற வாரம் சுற்றுலாவிற்குச் சென்று வந்தேன். நான் சென்று வந்த இடம் பற்றிக் கேட்டாய் என்றால் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பாய். ஆம்! உனக்குப் பிடித்த மாமல்லபுரத்திற்குக் குடும்பத்துடன் சென்று வந்தேன். பாடத்தில் படித்ததைவிட நேரில் சென்று பார்த்தது மேலும் சிறப்பாக அமைந்தது. பஞ்ச பாண்டவர் ரதம் தொடங்கி, கடற்கரைக் கோவில் வரை சென்று வந்தோம். பல்லவ மன்னன், சிற்பக்கலையின் மீதுள்ள தீராக் காதலினால் சிற்பங்களை வடித்துள்ளான். அங்குள்ள சிலைகளும் கடலலைகளும் எண்ணற்ற கதைகளைக் கூறுகின்றன. முழுவதும் சுற்றிப்பார்க்க ஒரு நாள் போதவில்லை. வாய்ப்பு கிடைப்பின் நீ தமிழ்நாடு வரும்போது நாம் இருவரும் சென்று சுற்றிப் பார்க்கலாம். உன் வருகைக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன். தமிழ்நாட்டில் சந்திப்போம்

அன்புடன்,
மெ. பனிமொழி.

பெறுநர்
பா. மலர்விழி,
10, திருவள்ளுவர் தெரு,
வடக்கு வர்ஜினியா மாகாணம்,
அமெரிக்கா.

### அலுவலகக் கடிதம் எழுதும் படிநிலைகள்

அலுவலகக் கடிதம் தனியாள் கடிதமாகவும், கூட்டுக் கடிதமாகவும் எழுதும் முறை உள்ளது. இதில் தனி ஒருவருக்கு வேலைவேண்டி விண்ணப்பம், புகார் விண்ணப்பம், பொது நன்மை கருதி அரசின் உதவிவேண்டி விண்ணப்பம், துறைசார்ந்த கடிதங்கள் ஆகிய யாவும் அடங்கும்.

#### 1. அனுப்புநர் முகவரி

கடிதத்தின் தலைப்பில் இடப்பக்கம் அமைவது. அனுப்புநரின் பெயர் உள்ளிட்ட முழு முகவரியைத் தெளிவாக எழுதவேண்டும்.

#### 2. பெறுநர் முகவரி

இது அனுப்புநர் முகவரியின்கீழ் அமைவது. இவ்வகைக் கடிதத்தில் பெறுநர் இயற்பெயரை எழுதக் கூடாது. அவர் ஏற்றுள்ள பணித் தகுதிப் பெயரையே எழுதவேண்டும் என்பது கவனிக்கத்தக்கது.

#### 3. விளி (அழைப்பு)

இது கடிதத்தின் இடப்பக்கம் அமைவது. உறவுமுறைக் கடிதம்போல் அல்லாமல் பெறுபவரின் பணித்தகுதி மதிப்பைக் குறிக்கும் வகையில் இவ்விளித்தொடரை அமைக்க வேண்டும்.

#### 4. பொருள்

இது விளித்தொடருக்குக்கீழ் அமைவது. கடிதத்தின் தேவையை இப்பகுதியில் ஓரிரு வரிகளில் சுருங்க உரைக்கவேண்டும்.

#### 5. கடிதச் செய்தி/உடற் பகுதி

இது பொருள் பகுதிக்குக் கீழ் அமைவது. கடிதத்தின் பொருளில் குறிப்பிட்ட சுருக்கத்தின் விளக்கமாக இருக்கவேண்டும். இப்பகுதியில் சிலர் தம்மைப்பற்றிக் குறைத்தும் மிகைப்படுத்தியும் பெறுநரை வானளாவப் புகழ்ந்தும் எழுதுவர். இம்முறையை நீக்கி, நம் தேவையைக் காரண காரியத்தோடு உரைப்பது போதுமானது. இப்பகுதி தேவை கருதி ஓரளவு விளக்கம் பெறலாம்.

### 6. வணங்கற் பகுதி

இது கடிதச் செய்திப் பகுதியின்கீழ் வலப்பகுதியில் அமைவது. அனுப்புநர்க்கும் பெறுநர்க்கும் உள்ள உண்மைத் தன்மையையும், பணிவையும் காட்டுவதாக இருக்கவேண்டும். உறவுமுறைக் கடிதம்போல அன்பைப் புலப்படுத்தக் கூடாது.

### 7. ஒப்பப் பகுதி

இது வணங்கற் பகுதியின்கீழ் அமைவது. அனுப்புநரின் கையொப்பம் இடம் வேண்டும். அலுவலகக் கடிதங்களில் சில நேரங்களில் குறிப்பிட்ட அலுவலர்க்குப் பதில் அவருக்குக்கீழ் பணிபுரியும் அலுவலர் ஒப்பம் இடுவதும் உண்டு.

### 8. நாள் –இடம்

கடிதச் செய்திக்குக் கீழும், அனுப்புநர் ஒப்பத்திற்கு நேர் இடப்பக்கமும் இது அமைய வேண்டும். இடம் முன்னும் நாள் பின்னுமாகக் குறிக்கப்படல் வேண்டும்.

### அலுவலகக் கடிதம்

**(மாதிரி)**

அனுப்புநர்

அ, தொல்காப்பியன்,
27. பனம்பாரனார் தெரு,
காப்பியக்குடி, கன்னியாகுமரி மாவட்டம்.

பெறுநர்

மேலாளர்,
ஏழிசைப் பதிப்பகம்,
76, விபுலானந்தர் தெரு,
தஞ்சாவூர் மாவட்டம் 613204.
திருவையாறு.

ஐயா,

பொருள்: நூல்கள் அனுப்பி வைக்க வேண்டுதல் – தொடர்பாக.

தங்கள் பதிப்பகம் தொன்மைத் தமிழ்ப் பெருநூல்கள், கல்வியியல் நூல்கள். ஆய்வு நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் போன்றவற்றைச் செம்பதிப்பாக வெளியிட்டுத் தமிழ்ப்பணி ஆற்றி வருவது பாராட்டுக்குரியதாகும். அண்மையில் தாங்கள் வெளியிட்ட நூல்களின் செய்தி விளம்பரத்தை நாளேட்டில் கண்டு

மகிழ்ந்தேன். அவற்றைப் பெற்றுப் படிக்க விரும்புகிறேன். எனவே, கீழ்க்காணும் நூல்களை அஞ்சல் வழியில் எனக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

1. திருக்குறள்
2. இலக்கிய வாழ்வியல்
3. ஆத்திசூடி
4. செம்மொழிக் கல்வி

இந்நூல்களுக்குரிய தொகையைத் தங்களுக்குப் பணவிடையாக அனுப்பியுள்ளேன்.

நன்றி.

இடம்: காப்பியக்குடி,
நாள் : 28.07.2022

தங்கள் உண்மையுள்ள,
அ. தொல்காப்பியன்.

## 2.5 படைப்பு வடிவ மாற்றம்

### படைப்பு வடிவ மாற்றம்

மொழியில் ஓர் அமைப்பில் உள்ள படைப்பினைத் தேவைநோக்கி, பிறிதொரு வடுவத்திற்கு மாற்றுதல் வடிவமாற்றம் ஆகும்.

ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் கொடுக்கப்பட்ட செய்தியை உரையாடல், விளம்பரம், கதை போன்ற பிற வடிவங்களில் எழுதுவது படைப்பாற்றலை வளர்க்கும் செயல்பாடாகும். கீழ்க்காணும் பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களின் படைப்பாற்றல் திறனை மேம்படுத்தல் வேண்டும்.

1. உரையாடலைச் செய்தியாக்கல்
2. கட்டுரையை உரையாடலாக்கல்
3. செய்தியைக் கவிதையாக்கல்
4. செய்தியைக் கதையாக்கல்
5. செய்தியை விளம்பரமாக்கல்
6. செய்தியை அறிவிப்பாக மாற்றுதல்
7. செய்தியைக் கடிதமாக்கல்
8. கவிதையை உரையாடலாக்கல்

### 2.5.1 வடிவம் மாற்றும்போது கவனிக்க வேண்டியவை

ஓர் இலக்கிய வடிவத்தினை மற்றொரு இலக்கிய வடிவமாக மாற்றும்போது கீழ்க்காணும் கூறுகளைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

- எந்த வடிவத்தில் உள்ள செய்தியை எந்த வடிவமாக மாற்றப் போகிறோம் என்பதில் தெளிவு வேண்டும்.
- மையக் கருத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.
- செய்திகளைத் திரட்டிக் கொள்ள வேண்டும்.
- எந்தக் கருத்தும் விட்டுப்போகாமல் செய்தியை முழுமையாகக் கூறவேண்டும்.
- கவிதை எனில் சுருங்கக் கூறி விளங்க வைத்தல் வேண்டும்.
- கட்டுரை, உரையாடல் போன்ற வடிவமெனில், மேற்கோள்கள், பழமொழிகள், மரபுத்தொடர்கள் ஆகியவற்றையும் விடாது செய்தியமைத்தல் வேண்டும்.

### 2.5.2 உரையாடலைச் செய்தியாக்குதல்

ஒரு பொருளைப்பற்றி ஒன்றுக்கு மேற்பட்டோர் கூடிக் கலந்து உரையாடுவது உரையாடல் எனப்படும்.

**எ.கா:**

**கீழ்க்காணும் உரையாடலைச் செய்தியாக மாற்றுதல்**

| | |
|---|---|
| **கபிலன்** | அம்மா! அம்மா! அங்கே பாருங்கள்! ஒரு நாய்க்குட்டி கத்திக் கொண்டிருக்கிறது. |
| **அம்மா** | கபிலா! பாவம், இந்த நாய்க்குட்டிக்குக் காலில் அடிபட்டு இரத்தம் கொட்டுகிறது. |
| **கபிலன்** | அம்மா! இதை யாரோ கல்லால் அடித்திருப்பார்கள் போலிருக்கிறதே! |
| **அம்மா** | அடிபட்ட இதனுடைய வலியும் வேதனையும் அடித்தவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது? இரக்கமற்ற இத்தகைய கொடுஞ்செயல்களைச் செய்வது பாவமல்லவா? |
| **கபிலன்** | ஆம், அம்மா! ஒருமுறை என் நண்பன் சின்னப்பன் விளையாட்டாக ஒரு நாயைக் கல்லால் அடிக்கப் போனான். நான் அவனைத் தடுத்து, 'இது தவறான செயல். நாயும் நம்மைப்போல் ஓர் உயிர் தான் . என்று |

| | |
|---|---|
| கபிலன் | அம்மா! அம்மா! அங்கே பாருங்கள்! ஒரு நாய்க்குட்டி கத்திக் கொண்டிருக்கிறது. |
| | கூறித் திருத்தினோன்.. |
| அம்மா | நல்லது செய்தாய்! இப்பொழுது நாம் இந்த நாய்க்குட்டிக்கு நம்மாலான உதவியைச் செய்வோம்! |
| கபிலன் | அம்மா! எங்கள் பள்ளிக்கு அருகில்தான் 'அரசு கால்நடை மருத்துவமனை' உள்ளது. நான் நாய்க்குட்டியை அங்குக் கொண்டுசென்று சிகிச்சை செய்து வரட்டுமா? |
| அம்மா | நல்லது கபிலா! அவ்வாறே செய். நீ பாதுகாப்பாகச் சென்று விரைவில் வீட்டிற்குத் திரும்பிவிடு, |
| கபிலன் | நன்றி அம்மா! (கபிலன் நாய்க்குட்டியை எடுத்துக்கொண்டு கால்நடை மருத்துவமனைக்குச் செல்கிறான்.) |

இந்த உரையாடலை செய்தியாக்கும் பொழுது இதில் காணப்படும் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தி, வெளிப்படும் உணர்ச்சி அமையுமாறு உரைநடை வடிவத்தில் தரும்போது அவ்வுரைநடை கீழ்க்கண்டவாறு அமையும்.

### 2.5.3 உரையாடலுக்கான செய்தி

கபிலன், அவன் வீட்டினருகே ஒரு நாய்க்குட்டியைக் கண்டான். அதனைத் தனது தாயாரிடம் காண்பித்தான். அதன் காலை எவரோ அடித்துக் காயப் படுத்தியிருந்தனர். இரக்கமற்ற இந்தக் கொடுஞ்செயலினால் காயத்தின் வலியும் வேதனையும் தாளாமல் அந்நாய்க்குட்டி கத்திக் கொண்டிருந்தது. இதனைக் கண்டு கபிலனும் அவன் தாயாரும் வருந்தினர். கபிலன், தாயாரிடம் ஒருமுறை தனது நண்பன் சின்னப்பன் விளையாட்டாக ஒரு நாயைக் கல்லால் அடிக்க முற்பட்டதையும் தான் தடுத்து, 'இது தவறான செயல்; நாயும் நம்மைப்போல ஓர் உயிர்தான்' எனச் சுட்டிக்காட்டியதையும் கூறினாள். பின்பு, அடிபட்ட நாய்க்குட்டியை அரசுக்கால்நடை மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு சென்றான்.

### 2.5.4 கட்டுரையை உரையாடலாக்குதல்

கட்டுரையை உரையாடலாக்குதல் ஒரு தனித்திறன், உரையாடல் அமைப்பவருக்கு நாடகச் சுவையுணர்வும் கற்பனை யாற்றலும் பெரிதும் தேவை.

**எ.கா:**

**கீழ்க்காணும் கட்டுரையை உரையாடலாக மாற்றுதல்**

## கட்டுரை
## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

### முன்னுரை

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. மருந்துக் கடைகளைப் பார்க்கும்போது எவ்வளவு மருந்துகள் எனும் வியப்பு ஏற்படுவதற்குப் பதிலாக எவ்வளவு நோய்கள் என்னும் அச்சமே அதனால்தான். இராமலிங்க அடிகளார் இறைவனிடம், 'நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். இந்த நோயற்ற வாழ்வைப்பற்றி இக்கட்டுரையிற் காண்போம்.

### குறைவற்ற செல்வம்

செல்வம் என்பது யாது? பணம், காசு, நகைநட்டு, வீடுவாசல், தோட்டந்துரவு, மாடு மக்கள், கல்வி கேள்வி ஆகியன செல்வங்களாகக் கருதப்படுகின்றன. நடமாட முடியாத அளவுக்கு நோயில் விழுந்து கிடப்பவர்க்கு இவற்றால் என்ன பயன்? அவருக்கு எந்த உணவும் ஒத்துவராது. பசி எடுக்கிறது; உணவு இருக்கிறது. ஆனால், உண்ண முடியாது. உண்டாலும் ஒத்துக் கொள்ளாது என்றால், அவர் கோடிகோடியாய்ச் சொத்துக் குவித்து என்ன பயன்? பயன்படாத செல்வம் இருந்தால் என்ன? போனால் என்ன? நோயற்ற வாழ்வுதான் செல்வம்; அதுவே குறைவற்ற செல்வம் ஆகும். முதற் செல்வம்

"ஆரோக்கியமே முதற் செல்வம்" என்றார் அறிஞர் எமர்ஸன். (Wealth is Health) அனைத்துச் செல்வங்களையும் பெற்றிருந்த போதிலும், உடல்நலமில்லை என்றால் அச்செல்வங்களால் பயனில்லை. வீட்டிலிருக்கும் வேலைக்காரர், சமையற்காரர் எல்லாம் நன்றாகச் சுவைத்துச் சாப்பிடும்போது நோய்வாய்ப்பட்ட வீட்டுக்காரர் பத்தியமாகவும் பட்டினியாகவும் இருப்பார். தன்னால், அவர்களைப்போல் உண்ண முடியவில்லையே என ஏங்குவார். "இவ்வளவு செல்வம் இருந்தும், சுவையாக உண்ண முடியவில்லை; திருப்தியாக உண்ண முடியவில்லை; இந் நிலையில் செல்வமிருந்தும் இல்லாததுபோல்தானே என எண்ணுவார். ஆதலால், மற்றச் செல்வங்களைக் காட்டிலும் உடல்நலம் முதற் செல்வமாகக் கருதப்படுகிறது.

### உடல் மன நலன்கள்:

நோய் வரும்வரையில் உடல்நலத்தைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. உடல் நலத்தின் மதிப்புத் தெரிவதில்லை. நலமான உடம்பில்தான் நலமான மனம் இருக்கும் என்பது உண்மை,

### முடிவுரை

உடல்நலமும் இன்பமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. உடல் நலமாக இருந்தால் இன்பமாக வாழலாம். சத்துள்ள உணவு, தூய காற்று, தூய நீர் ஆகியவற்றைப் பயன்படுத்தினால் எமன் நம் எதிரே வர அஞ்சுவான். பாரதி பாடியதுபோல்,

"காலா! என் காலருகே வாடா – உனைச் சற்றே மிதிக்கிறேன்" எனத் உறுதியாகக் கூறலாம். இவற்றால், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை அறியலாம்.

இக்கட்டுரையில் நலவாழ்வினைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அச்செய்திகளை உரையாடல் மூலம் வெளிப்படுத்த பொருத்தமான கதைமாந்தர்கள் வேண்டும். நோயைப் பற்றி தெரிவிப்பதற்கான கதைமாந்தர் நோயாளி. நோயிற்கு தீர்வு தருகின்ற கதைமாந்தர் மருத்துவர். இவ்விருவருக்கிடையே நடைபெறும் தகவல் பகிர்வு உரையாடலாக அமையும்.

### 2.5.5 கட்டுரைக்குரிய உரையாடல்

**(மருத்துவரும் நோயாளியும்)**

| | |
|---|---|
| நோயாளி | மருத்துவர் ஐயா! இரவிலிருந்து வயிற்றுவலி பாடாய்ப் படுத்துகிறது. வயிற்றுவலியைப் போக்க மருந்து தாருங்கள். |
| மருத்துவர் | இரவு என்ன உணவு சாப்பிட்டீர்கள்? |
| நோயாளி | நேற்று மதியம் கொஞ்சம் சோறு சாப்பிட்டேன். இரவு சாப்பிடவே இல்லை. |
| மருத்துவர் | ம்.. வயிற்றுப் பசிதான் உமக்கு நோய்! நன்றாகச் சாப்பிடுங்கள், எல்லாம் சரியாகிவிடும். |
| நோயாளி | உணவு மட்டும் போதுமா? |
| மருத்துவர் | பசித்த வயிற்றுக்கு உணவே மருந்து; பசியாத வயிற்றுக்கு அவ்வுணவே நோய். ! |

| | |
|---|---|
| **நோயாளி** | என்ன சொல்கிறீர்கள்? உணவே மருந்தாகவும் நோயாகவும் இருக்குமா? |
| **மருத்துவர்** | நிச்சயமாக! உணவை அளவுக்கு அதிகமாக உட்கொண்டால் அது வயிற்றில் சிக்கலை ஏற்படுத்தும். அளவாக உண்டால் நலமாக வாழலாம். இன்னும் சொல்லப்போனால் உடல்நலமும் சிறப்பாக இருக்கும். |
| **நோயாளி** | ஆமாம் ஐயா! மருந்துக் கடைகளை நோக்கும்போது எத்தனை எத்தனை வகையான நோய்கள்! எனும் அச்சமே ஏற்படுகிறது. |
| **மருத்துவர்** | உடல்நலமே உயர்ந்த செல்வம். பணம், நகை, வீடு, வாசல், தோட்டம், மாடு, கல்வி, கேள்வி, மக்கள் எல்லாம் இருந்து என்ன பயன்? நோயுற்றால் எல்லாம் உடன் வருமா? அதனால் தான் அன்றே நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் எனக்கூறிச் சென்றார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும்போது வியப்பாய் இருக்கிறது, உடல்நலனும் இன்பமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. உடல் நலமாக இருந்தால்தான் இன்பமாகவாழலாம். சத்துள்ள உணவு தூய காற்று, தூய குடிநீர் நலமான வாழ்வுக்கும் நெடுநாள் வாழ்வுக்கும் இன்றியமையாதன. |
| **நோயாளி** | ஆம்! உங்கள் பேச்சைக் கேட்டவுடன் "காலா! என் காலருகே வாடா – உனைச் சற்றே மிதிக்கிறேன்" என்ற பாரதியார் பாடல்தான் நினைவுக்கு வருகின்றது. உடல் நலமே முதற் செல்வமென அறிந்துகொண்டேன். |

### 2.5.6 செய்தியைக் கவிதையாக்கல்

கவிதை என்பது சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாகும். எளிய சொற்களால் ஆனது.

**எ.கா:**

**கீழ்க்காணும் செய்தியை கவிதையாக மாற்றுதல்**

படர வழியின்றித் தரையில் தவித்த முல்லைக்கொடிக்கு தன் தேரையே பாரி கொடுத்தான். இதனைச் சங்க இலக்கியத்தில் கபிலர் பாடியுள்ளார். இந்த இலக்கியக் கருத்தைச் செய்தியாகப் படித்துச் சுவைத்துக் கவிதையாக்கும்போது பாரியின் கொடையுள்ளம் வெளிப்படுகிறது. கவிதையில் உயிர்ப்பு கொடை உள்ளத்தைக் காட்டுவதாக இருக்கும்.

**தரையில் படர்ந்த முல்லை**
**தாவிப் படர இடமில்லை**
**பார்த்த பாரி மன்னன்**
**கொடுத்தான் தேரை**
**கொடையால் பெற்றால் சிறப்பு.**

**–பி.இரத்தினசபாபதி**

## 2.6 தொகுப்புரை

### தொகுப்புரை

பொதுவாகப் படைப்பு என்பது, அனுபவப் பகிர்வு எனலாம். படைப்பாளியின் அனுபவத்தில் எழும் படைப்புகளுள், கதை மனம் சார்ந்தது. கற்பனை சார்ந்தது. அனுபவத்தை நிகழ்த்திக் காட்டுவது. கவிதை, உயர்ந்த அனுபவத்தின் அழகிய தெளிவு எனலாம். ஒரு கருத்தைத் தெளிவாக விளக்குவது கட்டுரை. கடிதம், சிறந்த உரைநடையில் நல்ல சொற்களைப் பயன்படுத்தி எழுதுவதாகும். நாடகம், உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி. கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவதாகும். இவ்வகையான படைப்பிலக்கியங்களைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டால், ஓர் இலக்கிய வடிவத்தினை, அதன் இயல்பு மாறாமல் மற்றொரு வடிவமாக மாற்றுவது எளிதாகிவிடும். இதற்கான கற்பித்தல் பயிற்சிகளை ஆசிரியர் முறையாக மேற்கொள்ளல் வேண்டும். மாணவர்களிடம் பயிற்சியும் முயற்சியும் இருப்பின் சிறந்த படைப்பாளர்களாவர் என்பதில் ஐயமில்லை.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – II |
|---|
| 1. 'இளமையில் கல்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதி படைப்பாற்றல் திறனை விளக்குக.<br>2. அலுவலகம் சார்ந்து ஏதேனும் ஒரு கடிதம் எழுதி விளக்குக.<br>3. ஒரு உரையாடலைக் கட்டுரையாக மாற்றுதல் குறித்து விளக்குக.<br>4. கீழ்க்காணும் தலைப்பில் கவிதை படைத்து படைப்பாற்றல் திறனை விளக்குக.<br>அ. அன்பு ஆ. இன்பம் |